உ
சிவமயம்

# நானிலம் போற்றும்
# நாவலர் பெருமான் பாமாலை






கலாபூஷணம்

எஸ்.சிவானந்தராஜா

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நானிலம் போற்றும்

# நாவலர் பெருமான் பாமாலை

1. நாவலர் பாமாலை பாடல்கள் 105
(சி.சிவானந்தராஜா)
2. நாவலர் பாமாலைத் தகவல்கள் -15
(நல்லை நகர் ஆறுமுகநாவலர்)
3. நாவலர் பாமாலைத் தகவல்கள் -26
(ஏனையவர்கள் பாடல்கள்)
4. நாவலரின் வாழ்க்கைத் தகவல்கள்
5. நாவலர் மரபினில் வாழ்ந்த பெரியார்கள்

கலாபூஷணம்
எஸ்.சிவானந்தராஜா
மார்கழி 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பற்றிய தகவல்கள்

1. நூலின் பெயர் : நாவலர் பெருமான் பாமாலை

2. நூலின் ஆசிரியர் : சிற்றம்பலம்.சிவானந்தராஜா

3. முகவரி : இந்துக்கல்லூரி வீதி,
செட்டிக்குறிச்சி
பண்டத்தரிப்பு.( யாழ்ப்பாணம்/இலங்கை)

4. பதிப்புரிமை : நூலாசிரியருக்கு

5. முதற்பதிப்பு : 3012.2021

6. பிரதிகள் : 200

7. நூலின் ISBN : 978-624-98955-0-8

8. நூலின் விலை : **200/=**

9. அச்சுப்பதிப்பு : சாய்ராம் பிறிண்டேர்ஸ்,சங்கானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முன்னுரை

சைவமும் தமிழும் தழைத்தோங்கத்
தன் வாழ்வை அர்ப்பணித்து
நாவலனாய் புலவனாய் பிரசங்கியாய்
நூல்கள் பல வெளியிட்டு
காவலனாய் கல்வி தனை மேம்படுத்த
சாலைகள் பலவும் அமைத்து
தேவனாய் சிவக் கோலம் பூண்டுநின்று
யாவரும் போற்ற வழிசமைத்தான்

எல்லாம் வல்ல இறைவனின் பூரண கிருபையாலும் பூர்வ புண்ணிய பலனாலும் தமிழுலகம் போற்றுதற்கு,தனிமனிதனாக நின்று போராடியவர் தவத்திரு.ஆறுமுகநாவலர் பெருமான் ஆவார்.

கிறிஸ்தவ மத போதனைகட்கு மத்தியில்,மிகவும் துணிவுடன் தமது வாழ்வையே அர்ப்பணித்து,ஏராளமான தமிழ் சைவ நூல்களை இயற்றியும் ,அச்சிட்டும், இலகு உரை நடை எழுதியும், ஏனையவர்கள் எழுதிய தமிழ் நூல்களை பரிசோதித்தும், வெளியிட்டு தமிழ் கூறும் நல்லுலகத்தினால் போற்றப்பட்டவர் ,கௌரவிக்கப்பட்டவர், இறவாப்புகழுடையவர்.

நாவலர் பெருமான் புகழ் கூறும் கட்டுரைகள் ,நூல்கள் ,பிரபந்தங்கள், கவிதைகள் இன்றும் வெளிவருகின்றன.200 ஆம் நினைவாண்டாக பிரகடனப்படுத்தியுள்ள இவ் வேளையில் எனக்கு தெரிந்த,சேகரித்த தகவல்களை கொண்டு கவிதைகளாக்கி நூலுருவாக்கம் செய்துள்ளேன்.

வாசகர்கள்,விமர்ச்சகர்கள் குறைபோக்கி ,நிறைகாண்பார்களாக.

நன்றி

செட்டிக்குறிச்சி,
பண்டத்தரிப்பு

கலாபூசணம்
சி.சிவானந்தராஜா

மார்கழி 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பாடல்கள் இலக்கம் |
|---|---|---|
| 1) | 1.நாவலர் பெருமானுக்கு அஞ்சலி | 01 - 05 |
| | 2.நாவலர் காலத்து சமய நிலை | 06- 09 |
| | 3.நாவலரின் பிறப்பும் கல்வியும் | 10 - 15 |
| | 4.நாவலரின் பொதுப்பணி | 16 - 29 |
| | 5.நாவலரின் திட்டமிடல் | 30-38 |
| | 6.நாவலரின் அறிவுரை | 39-46 |
| | 7.புராணபடனம் பற்றிய கருத்து | 47-50 |
| | 8.நாவலரின் பிரசங்கங்கள் | 51-63 |
| | 9.ஆலயங்கள்,பூசகர்கள்,நல்லை முருகன் | 64-69 |
| | 10.சகோதரனுக்கு ஒரு விண்ணப்பம் | 70-71 |
| | 11.நாவலரின் சமூகப் பணி | 72-75 |
| | 12.நாவலரின் நூற்பதிப்பு | 76-80 |
| | 13.கீரிமலைச் சிவன் ஆலயம் | 81-84 |
| | 14.நாவலரின் சமய வாழ்வு | 85-94 |
| | 15.ஆறுமுகநாவலரை பூமிக்கு அழைத்தல் | 95-103 |
| | 16.வாழ்த்து | 104-105 |

2) நாவலர் பாடிய பாமாலைத் தகவல்கள்

3) நாவலர் மீது ஏனையோர்கள் பாடிய தகவல்கள்

4) நாவலர் பரம்பரை

5) நாவலரின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

6) நாவலர் மரபில் வாழ்ந்த பெரியார்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. 1. நாவலர் பெருமானுக்கு அஞ்சலி

தெய்வத்திருக்கோலம் பூண்ட வடிவினராய்
நித்தம் சிவபூசையில் தோத்திரங்களும் பாடி
உய்யும் ஆன்மீகச் சைவ நெறிதனைக் காட்டி
திருமுறைகள் புராணங்கள் பாராயணஞ் செய்து
மெய்ஞ் ஞான உணர்வினராய் மேதினியில் வாழ்ந்து
தர்மங்கள் தானங்கள் தவறாமல் செய்து
செய்யும் நெறியெலாம் நீதி வழுவாது நின்று
வாழ்ந்த நாவலரை நாவார வாழ்த்துவோம் 1

செயற்கரியன வாழ்வில் துணிவுறச் செய்தவராய்
அளப்பரிய தமிழ் நூல்கள் அழியாமல் பதிப்பித்து
தயக்கமின்றி தம்வாழ்வை சைவம் வாழ அர்ப்பணித்து
பிரசங்கங்கள் புராணங்கள் திருமுறைகள் ஓதுவித்து
மயக்கத்துடன் வாழுகின்ற மாந்தருக்கு நல்வழி காட்டி
சொல்லிலும் செயலிலும் சிவநெறியில் வாழ்ந்து
உயர்ந்து நின்ற ஆறுமுக நாவலர் ஒருவரே
தமிழும் சைவமும் அழியாமல் பாதுகாத்தார் 2

சிவநெறியே நின்ற சிந்தையாளனை
தவநெறியே பூண்ட தத்துவ ஞானியை
பாவலரும் போற்றும் தமிழ்ப்பண்பாளனை
உவகையுடனே தமிழ் மொழியைக் காத்தவனை
சைவம் காத்த சரித்திர நாயகனை
பாவங்களே செய்யாத பகுத்தறிவாளனை
கவிஞனாய் கலைஞனாய் சொற்பொழிவாளனாய்
துறவறம் நின்ற ஆறுமுகனை வாழ்த்துவோம் 3

நற்றவம் போற்றி நானிலஞ் சிறக்க
கற்றுணர் நாவலர் காட்டிய நெறிதனை
உற்றுணர் வல்லவர் போற்றியே பலரும்
பற்றுடன் வாழ்கின்றார் பாரெல்லாம் வியக்க 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியில்
## நாவலரின் உருத்தோற்றம்

பொதுவான நிறமும் சாமான்ய உயரமும்
நீண்ட பெரு நெற்றியும் பருத்த தலையும்
காதுகள் இரண்டுமே சிறியனவாய் இருக்க
பருத்த நெஞ்சும் பலமற்ற தேகமும்
மிருதுவான கைகளும் சூம்பிய கால்களுடன்
மனதினிற் பூரண ஆத்ம பலமும்
ஆதாரமாக உணவை சிறிதே உட்கொள்ளும்
நாவலரின் உருவை நவின்றிடல் இனிதே 5

(த.கைலாசபிள்ளை நாவலர் சரித்திரம் பக்கம் 24)

## 2)நாவலர் காலத்தில் சமய நிலை

போர்த்துக்கேயரின் அரசாட்சி நடக்கையிலே
கத்தோலிக்க மதமானது மேன்மை அடைந்ததால்
பார்த்த இடமெங்கும் சைவால யங்களை
இடித்தழித் ததனால் சைவா சாரங்களை
மக்களும் மேற்கொள்ளாது ஒளித்தே காத்தனர்
ஒல்லாந்து அரசினரும் தங்களது சமயத்தை
தொடர்ந்தே பரப்பிடும் வேளையில் இலங்கையில்
சைவத்தைக் காக்க நாவலர் தோன்றினார் 6

மன்னார் அருகினில் மாதோட்ட நகரினிலே
கேதீச்சர மென்னும் திருத்தலம் ஒன்றுண்டு
முன்னாளில் சம்பந்தர் சுந்தரர் பாடிய நற்
திருப்பதியாம் உடனே அங்கு செல்வீர்
என்ன உருவமோ பூசையும் இல்லாத
கோயிலைக் கண்டு நீர் புனரமைத்திடுவீர்
தேன்பொந்து அதுவேதான் அங்கே தான் மருந்துமுண்டு
மறைந்துள்ள அத்தலத்தை நீவீர் கண்டிடுவீர் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுநூற் றாண்டுகளாய் வழிபாடி யற்றாமல்
கேதீச்சரக் கோயில் இருந்ததனால்
மேன்மை கொள் சைவம் தழைத்திட நாவலர்
விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டாரே
வன்னிப் பிரதேசத்திலே சிவாலயங்கள் பலவிருந்தும்
அவையழிந்தும் மறைந்தும் இருப்பதனால்
இன்னல்கள் எதுவந்தாலும் சைவம் தழைத்திட நீர்
ஒன்று பட்டு உழைத்திட அறைகூவினார் 8

(நாவலரின் 1872 விஞ்ஞாபனம் -ஆங்கீரச வருடம் ஐப்பசி மாதம்)

சைவாலயங்களை இடித்தழித்த அன்னியர்
பலவந்த மாகவே அனுட்டானங்களைத் தடுத்து
தேவையின் நிமித்தம் சலுகைகளை வழங்கி
தமது சமயத்தினில் பலரை இணைத்தனர்
நாளுக்கொரு பசு இறைச்சியுணவுக்காக
கொடுக்கும் நியதியில் ஞானப்பிரகாச முனி
மாளாது ஊர் விட்டு சிதம்பரம் சென்ற பின்
சமயப்பணியங்கு சிறப்புறச் செய்தார் 9

## 3) நாவலரின் பிறப்பும் கல்வியும்

(1745 சித்திரபானு வருடம் மார்கழி 22 -18.12.1822 புதன்)

ஆயிரத்து எண்ணூற்று இருபத்து இரண்டினில்
மார்கழி பதினெட்டு புதன்கிழமை இரவினில்
வையகம் உய்ந்திட அவதரித்த நாவலர்
தமிழ் வாழ சைவம் வாழ அயராது பணி செய்தார்
வயதோ ஐந்தினில் வித்தியாரம்பம் செய்த பின்
யாழ் வெஸ்லியன் கல்லூரியில் பயின்று
உயர்கல்வி பெற்றதும் பத்தொன்பது வயதினில்
ஆசிரியராகி அங்கே பணியும் செய்தார் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமணக்கும் புனித நல்லூர் கந்தர் சிவகாமிக்கு
    ஆறாவது மகனாக அவதரித்த ஆறுமுகனுக்கு
சேமமுற சகோதரனைந்தும் சகோதரிகள் மூன்றுமாக
    சிறப்புற்று வளர்ந்த ஐந்தாம் வயதினிலே நாமமுற
வித்தியாரம்பம் செய்தசுப்பிரம் மணியமும்
    தொடர்ந்து இருபாலை சேனாதிராய முதலியாரும்
தே மதுர இலக்கண இலக்கியங்கள் படித்திட
    சரவணமுத்துப் புலவரும் கைகொடுத்தார் 11

நல்லூரில் சிறியதொரு பள்ளிக்கூ டமைத்து
    சுப்பிர மணிய பிள்ளையிடம் கற்கையில்
நூல்களில் மூதுரை நிகண்டு முதலான
    கருவி நூல்கள் பல நாவலர் கற்றபின்
சில வருடங்கள் தொடர்ந்து வேலாயுதப்பிள்ளையிடம்
    இடைவிடாது கல்விதனை தொடர்ந்து
இலக்கண இலக்கிய களஞ்சிய மாகத்திகழ்ந்த
    சரவணமுத்து புலவரிடமும் கற்றார் 12

கையில் எழுத்தாணி ஓலைச் சுவடியுடன்
    தந்தையோ நாடகம் எழுதிடும் வேளையிலே
நோயினால் அவரும் சிவபதம் அடைந்திட
    ஒன்பது வயதுடைய நாவலர் கண்ணுற்று
சேயிவன் நாடகக் கதையினை அழகுற
    எழுதி முடித்ததை கண்ணுற்ற சகோதரர்கள்
பிரீதியினால் நாவலனை உயர்கல்வி கற்றிட
    புலவர்கள் வீட்டிக்கு அனுப்பி வைத்தனர் 13

ஆங்கில அறிவு பெற்ற
    சகோதரர்கள் துணையுடன்
ஆங்கிலப் பாட சாலையினில்
    புலமை பெறக் கற்று
ஆங்கில பாதிரியார்
    பார்சிவலும் வேண்ட
ஓங்கு புகழ் விவிலிய வேதம்
    தமிழினில் மொழிபெயர்த்தார் 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் காலமதில் ஸ்நாந அனுட்டானம்
முறைப்படி முடித்து ஏட்டுடன் செல்வதும்
முடிந்த வரையிலே இலக்கண இலக்கிய
நூல்களை விரைவாக தானே கற்றுணர்ந்தும்
புராணங்கள் படித்திடும் கோயில்களுக்கு சென்று
தவறான அர்த்தம் சொல்பவரை கண்டித்தும்
படிக்கும் பாடல்களின் இலக்கண பிழைகளை
முறையே நாவலர் நேரினில் கூறுவார் 15

## 4) நாவலரின் பொதுப்பணி

நல்லைநகர்க் கந்தரும் சிவகாமிப் பிள்ளையும்
பெற்றெடுத்த ஆறாவது மகனான நாவலர்
எல்லையில்லாக் சிவன் மீது அளவிலா பக்தி கொண்டு
சைவமும் தமிழும் வாழப் பணிசெய்து
பல்வகை நூல்கள் இருப்பத்து மூன்றுடன்
உரைகள் செய்த நூல்கள் எட்டும்
நல்விருந் தாய்பதிப்பித்த முப்பத்தொன்பதும்
பாடல்கள் பதினான்கும் படைத்தாரே 16

பேர்சிவல் பாதிரியாரின் விருப்பத்திற்கிணங்க
விவிலிய வேதத்தை தமிழில் மொழிபெயர்த்து
ஆர்வமிகுதியால் சென்னை மாநகர் செல்கையில்
சமய பிரசங்கம் செய்த பெருமையால்
திருவாவடு துறையின் ஆதீனம் அளித்த
நாவலர் என்கின்ற பட்டத்தை ஏற்று
விருப்புடன் அச்சியந்திரம் ஒன்றை வாங்கி
யாழ்ப்பாணத் தன் வீட்டில் ஸ்தாபிதம் செய்தார் 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கண இலக்கியம் தர்க்கம் வேதாந்த
சித்தாந்த புலமையுடை ஆறுமுகநாவலர்
உலகிற்கு சைவத்தை பரி பாலித்து நடத்தவும்
வேண்டிய தமிழ் சைவ நூல்களைப் பிரசுரிக்கவும்
கல்வியும் சமயமும் வளர்த்தற் பொருட்டு
ஆசிரியர் சேவையை பரித்தியா கஞ் செய்து
இல்வாழ்வில் ஈடுபடாது பிரம்மச்சரிய விரதம் பூண்டு
இதயசுத்தியுடன் தன் வாழ்வை அர்ப்பணித்தார் 18

இலவச சமயக் கல்வி தனை ஊட்ட
திண்ணைப் பள்ளியில் தமிழைக் கற்பித்து
இலங்கையில் வண்ணார் பண்ணையில் ஒன்றும்
சென்னையில் ஒன்றுமாய் பள்ளிகள் தொடங்கி
இலக்கண இலக்கிய நூல்களை இயற்றி
இந்து சமயத்தின் புராணங்கள் முதலாக
இல்லங்கள் தோறும் சைவம் வளர்க்க
நூல்கள் பலவும் ஆக்கினார் நாவலர் 19

அறிவைப் பகிர்ந்திட ஆக்கமும் ஊக்கமும்
தினமும் வளர்த்த நாவலர் பெருமான்
நெறிமுறை தவறாமல் தமிழும் சைவமும்
தம்மிரு கண்களாய்த் தலைமுறை காத்து
அறிவாலயங்கள் பலவும் நிறுவி
ஏழை மக்களின் வாழ்வை உயர்த்தி
குறிப்பிட்ட கோவில் மண்டபங்கள் தனிலே
பிரசங்கங்கள் செய்து பிரசுரங்கள் வெளியிட்டார் 20

மக்கள் தொண்டே மகேசன் தொண்டென
மக்கள் மனதில் சமயம் வளர்த்தார்
தக்கநற் பெரியாரின் உதவிகள் பெற்று
கிராமங்களில் சில பள்ளிகள் அமைத்து
திக்கெல்லாம் சைவத்தின் மேன்மையை உணர்த்தி
பிற சமயங்களின் தாக்கத்தை குறைத்தார்
நெக் குருகும் பண்முறை தெரிந்த ஓதுவார்களை
ஓதவும் செய்து ஓதுவிக்கவும் செய்தார் 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனை மறவாது இருத்தலே செல்வமென
வாழ்க்கையில் கருதிய ஆறுமுகநாவலர்
சைவ சித்தாந்த உண்மைகள் பரப்பிட
கோவில்கள் தோறும் பிரசங்கங்கள் செய்தும்
தவமான சித்தாந்த நூல்களை அச்சிட்டும்
ஊர்களில் பல பாடசாலைகள் நிறுவி
உவந்திட பிள்ளைகட்கு சிவ சிந்தனையூட்டி
புறமத இருள் தனை நாட்டினில் களைந்தார் 22

சமயம் சார்ந்த நூல்களை இயற்றி .
பாடசாலைகளில் அவற்றை பயிற்றுவித்து
தமக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளை
ஒப்பு நோக்கியே நூலாகப் பதிப்பித்தும்
எம்மவர் வாழ்வினில் சமயம் வளர்த்திட
பிரசாரம் பிரசங்கம் தொடர்ச்சியாய் செய்தும்
எம்பெருமானின் ஆலயங்கள் திருத்தி
நித்திய நைமித்திய கிரியைகள் செய்வித்தார் 23

குருகுல முறையில் கல்வி தனை
மக்கள் யாவரும் கற்றுப் பயன்பெற
ஊர்கள் தோறும் பள்ளிகள் நிறுவி
உயரிய திட்டங்கள் பலவும் வகுத்து
அரும்பெரும் புராணப் படைப்புகளை இலகுவில்
பாமர மக்களும் தாமாக படித்துப்
புரிந்து கொள்ளவே எளிய வசனநடை
உரைகள் பலவும் அச்சேற்றி வெளியிட்டார் 24

பெரு நோக்குடனே அச்சியந்திரம் பெற்று
தமிழ் சைவ நூல்கள் பதிப்பித்தும்
வரலாற்று நாயகனாய் தூரநோக்குடனே
தமிழ் வாழ நூல்கள் யாவும் பதிப்பித்தும்
உருமாறா இலக்கிய ஏட்டுச் சுவடிகளைத்
தேடித் ஆராய்ந்து நூல் ஆக்கியும்
பிரசுரங்கள் வெளியிட்டு மக்களின் விழிப்பு
உணர்ச்சிகளை தூண்டியும் நின்றார் 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்துக்கு விரோதமாக இடையூறு செய்திடும்
சண்டாளரை எதிர்த்து சுன்னாகக் கவிராயர்
முத்துக்குமாரரின் ஞானக்கும்பி நூலினை
பரிசோதித்த நாவலர் "சுப்ரபோதம்"
"சைவ தூஷண பரிகாரம்" நூல்களை எழுதி
தனது பிரச்சார எதிர்ப்பினை வெளியிட்டு
தமது நிலைப்பாட்டைத் தெளிவுறச் சொல்லி
சமய விரோத நடவடிக்கையை எதிர்த்தார் 26

பற்பல இடங்களில் நாவலர் விரும்பியே
பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டு
கற்ற பெரியோர்கள் உதவிகள் பெற்றும்
அச்சிட்டு வெளியிடும் நூல் வருமானத்திலும்
அற்புதமாக இயங்கிடும் வேளையில் ஒருநாள்
ஆங்கில பள்ளியில் கற்றவோர் மாணவனை
கற்பித்த பாதிரி வெளியே துரத்திட
வேதனை கொண்டு நாவலர் சிந்தித்தார் 27

விபூதி தரித்ததால் மாணவன் ஒருவனை
யாழ்ப்பாண பாதிரி வெளியேற்றியதனால்
மாபெரும் ஆங்கில பள்ளியொன்றதனை
வண்ணார்பண்ணையில் நாவலர் அமைத்தார்
தாபித்த நான்கு வருடங்கள் கடந்திட
அரச நிதியும் மக்களின் ஒத்துழைப்பின்மையால்
சுபீட்சம்காணாத மாணவர் வரவினால்
ஊக்கத்தை கைவிட்டு நாவலர் இருந்தார் 28

திண்ணைப் பள்ளியிலே காலையிலும் மாலையிலும்
கல்விதனை கற்பித்து உலகம் பயனடைய
எண்ணியே சதாசிவம் சுவாமிநாதர் நடராசர்
விசுவநாதர் ஆறுமுகம் கந்தசாமி மாணவர்க்கும்
கண்ணான பொன்னம்பலம் வைத்திலிங்கம் வேற்பிள்ளை
கனகசபாபதி சபாபதி பொன்னம்பலபிள்ளை
மாணவர்க்குங் கற்பித்து தன்னுடைய மரபினிலே
சமயத்தை வளர்த்திட நாவலர் முன்னின்றார் 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. நாவலரின் திட்டங்கள்

(சென்னையில் பெரிய வித்தியாசாலை யொன்றை தாபிக்க எண்ணி
வெளியிட்ட விஞ்ஞாபனம் - ரௌத்திரி வருடம் வைகாசி 22)

நிலையிலாச் சரீரந் தன்னை கொண்டவென் கருத்துக்கள்
நிறைவேறுமோ என்றெண்ணும் கவலை இரவு பகல் வருத்த
நிலை பேறாம் தமிழ்க் கல்வி சைவ சமயமும் ஓங்கிட
முக்கிய தலங்களில் வித்தியாசாலைகள் தொடங்கிட
தலையாய சமய போதனை செய்ய வல்லார்தமை
ஊக்குவித்து கல்வி புகட்டிட மாணாக்கரைச் சேர்த்து
இல்லையென் னாதவர்க்கு அன்ன வஸ்திரம் கொடுத்து
தமிழிலக்கண இலக்கியங் கற்பித்தல் வேண்டும் 30

தமிழுபாத்தியாயர் மூவர்க்கு ஐம்பதும் முப்பதும் இருபதும்
சமஸ்கிருத சிவாகம பண்டிதருக்கு இருபதும் இருபதும்
அமிழ்தினு மினிய திருமுறை யோதுவார்க்கு பத்தும் கொடுத்து
இலேகதர் மற்றும் கணக்கு பிள்ளைக்கு ஏழும் ஐந்தும்
தமிழ் கற்கும் நூறு மாணவர்க்கு ஐந்நூறும் கொடுத்து
சேவகனுக்கைந்தும் தோட்ட காரனுக்கு மூன்றும்
சமயோசித செலவு மற்றும் புத்தகாதி தேவைகட்காக
பத்து ரூபாவுடன் மொத்தச் செலவு எழுநூறாகுமே 31

உத்தமோ த்தம தருமத்தின் பொருட்டு
எண்பதி னாயிரம் ரூபாவைச் சேர்த்து
நித்திய நீர்ப்பாசனக் கிராமமொன்று வாங்க
எழுபதினாயிரம் ரூபாவைக் கொடுத்தும்
வித்தியா சாலைக்கொரு மடத்தை கட்டுவிக்க
பத்தாயிரம் ரூபா பெறுமதியும் கொடுத்திட
அத்தியா வசியமான தானம் கொடுப்பவர்கள்
பூமி வஸ்திரமும் அன்னமும் கொடுப்பாரே 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பர வீதியில் விசால நிலம் வாங்கி
பள்ளியும் மடமும் கட்டவேண்டும்
விதம்விதமான நற் பூசைக்கு உகந்த பூக்கள்
தரும் நந்த வனம்மொன்றை அமைக்க வேண்டும்
வேதமும் ஒழுக்கமும் நீதிநூல்கள் புராணங்களும்
கற்கும் வசதியங்கே செய்திடல் வேண்டும்
ஓதுவார்கள் மூலம் தமிழ்மறை வேதத்தை
பண்ணுடன் ஓதிடப் பயிற்சி தர வேண்டும் 33

இலக்கண இலக்கியம் கற்ற பிள்ளைகள்
சிவ தீட்சை பெற்று அனுட்டானம் பார்ப்பர்
நலமாகச் சிவபூசை செய்தாலயஞ் செல்வர்
நாளுமே பஞ்சாட்சர நாமம் செபிப்பர்
வலம் வந்து சுவாமி பின்னே திருமுறைகள் ஓதுவர்
தாளங்கள் போட்டு அங்கு திருக்கூத்தாடுவர்
நிலம் முதல் பனைமரம் பணம் உபகரித்து
சான்றோர்கள் நற்பணிக்கு தோள் கொடுத்துதவுவர் 34

வித்தியா சாலையில் தேர்ச்சி யடைந்தவர்கள்
சைவப்பிரசாரகராய் சமயந்தனைப் போதிப்பர்
பத்திசெய் யடியார்க்கு அன்ன போசனம் வழங்க
மடாதிபதிகளும் முன்வந்து கைகொடுத்துதவுவர்
சித்தங்கலங்கிட என்றன் ஆவியும் பிரியுமுன்னே
எடுத்த தேகமென்றும் சிவப் பணியே செய்து
அத்தன் அடி பணிந்து எடுத்த காரியங்கள்
யாவுமே இனிதே நிறைவேற நாவலர் பணிகின்றார் 35

திருக்கோவில் மடங்களிலே நாடோறும் இரவினில்
கேட்போர் பயன்பெற நற் புராணங்கள் படிக்கவேண்டும்
விருப்புடன் புராணங்கள் கேட்கும் அடியவர்க்கு
பொருள் விளங்கிட உரைகள் சொல்லவேண்டும்
திருமுறைகள் தந்த அருளாளர்களின் தினங்களில்
குரு பூசைகள் செய்து வணங்கிட வேண்டும்
பரிபக்குவமுடைய கற்றார்க்கும் மற்றார்க்கும்
நிருவாண தீட்சைகள் கொடுத்திடல் வேண்டும் 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிமை பொருந்திய மடாதிபதிகள் பிரபுகள்
 வறிய அடியார்க்கு அன்னம் தரவேண்டும்
தகைமை அறிந்திட கற்கின்ற மாணவர்க்கு
 வருடத்தில் பரீட்சைகள் வைக்கவேண்டும்
தகைமை அறிந்தபின் கற்றவல்லாளருக்கு
 தகுதிச் சான்றிதழ் வழங்கிட வேண்டும்
வெகுமதி பெற்றவர்க்கு சின்னங்கள் வழங்கி
 சைவப் பிரசாரகராய் நியமிக்க வேண்டும் 37

சற்சமயமான எங்கள் சைவ சமயத்தை
 குன்றிடா வண்ணம் பாதுகாத்திடவே
பற்பல உதவிகள் செய்பவர் இல்லாமல்
 இரவிலும் பகலிலும் பெருமூச்சு விடுகின்றேன்
நற் பல பணிகளை செய்யாமல் பிதற்றிடும்
 வீணர்க்கு இது பற்றி எடுத்துச் சொல்லாமல்
உற்றவராய் என்னுடன் தருமங்கள் செய்வார்க்கே
 சிவபுண்ணிய முயற்சிகளை நாவலர் எடுத்துரைத்தார் 38

நல்லாசிரிய பதவியினைத் தூக்கியெறிந்த நாவலரிடம்
 நாளையுன் வாழ்வினுக்கு வகையென்ன சொல்வாய்?
உகைத்தில் உனக்கிருந்த மதிப்பினைநீ இழந்தாயென
 சகோதரர்கள் நாவலரை யாவரும் வைதிடவே
பலகாலும் யோசித்தேயான் இம்முடிவுக்கு வந்தேன்
 உங்களிடம் பொருளுதவி செய்யும்படி கோரேனென
பலமாகவே சொல்லிய நாவலர் துறவுபூண்டு
 தமிழ்சைவம் வாழ்வதற்கு இலட்சியம் கொண்டார்

இருள் சூழ்ந்த தமிழன்னை செய்வதறியாது இருந்த வேளை
அருள் கொடுத்த நல்லை நகர் ஆறுமுகன் பணித்திறத்தால்
குரல் கொடுத்து உரமூட்டி தமிழ் சைவ நூல்கள் வெளிவிடும்
மரபு தனைக் காத்திட அச்சு இயந்தித் தேவைதனை உணர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6) நாவலரின் அறிவுரைகளும் சாதனைகளும்

சமயங்கள் யாவுமே வாழ்க்கையின் வழிகாட்டி
விமர்ச்சனங்கள் அவை பற்றி சிந்திக்க வேண்டாம்
சுமை போல சமயத்தை கருதாமல் வாழ்ந்தால்
நம்மையும் பிறரையும் அச்சமயம் வாழவைக்கும்
நஞ்சமயம் மேலோங்க நாவலர் உழைத்தனால்
மக்களின் சிந்தனைகள் தெளிவுற்றுச் சிறந்தன
சமயங்கள் ஏட்டளவில் இருந்திடாமல் பாதுகாத்து
செயற்பட்ட நாவலர் இறுதிவரை வாழ்ந்து காட்டினர் 39

திருமுறைகள் காட்டு நெறி வாழ்வினிலே ஓங்க
தமிழ்மொழியும் சைவமும் தழைத்தினிது ஒளிர
புராணங்கள் திருமுறைகள் முறைப்படி ஓதி நின்று
மக்களுக்கு ஆன்மீக நெறிதனைப் புகட்டி
திருக்கோவில் வழிபாட்டு முறைகளைச் சொல்லி
விரத மனுட்டானங்கள் மேன்மை தனை உணர்த்தி
அருமறைகள் தந்த அருளாளர்கள் போன்றே
குருவாகி குவலயமே வணங்கிட உயர்ந்தார் 40

எண்ணரிய புராணங்கள் திருமுறைகள் உணர்த்தும்
ஆன்மீக வாழும் நெறி மக்களுக்கு உணர்த்த
கண்ணிலே பட்ட நூல்கள் ஏடுகளைக் கண்டு
முடிந்தவரை அவை யனைத்தும் நூல்வடிவிலாக்கி
மண்ணிலுள்ள மாந்தரெல்லாம் தாமாக கற்றிட
எளியவுரைகள் தனை எழுதி வசனநடை யாக்கி
திண்ணமுடன் தன் வாழ்வை அர்ப்பணித்த நாவலரை
வாயார வாழ்த்தி கையாரத் தொழுவோம் 41

திருக் கோவில் மடங்களிலே புராணங்கள் ஓதிடவும்
புராண படனங்கள் பிரசங்கங்கள் செய்திடவும்
அருள் பெருகும் திருமுறைகள் பண்ணுடனே ஓதிடவும்
மடாதிபதிகள் உதவியுடன் அன்னதானம் வழங்கிடவும்
திருநெறிய சமய சந்தான குரவர்கட்கு
வருடமொரு முறை குரு பூசைகள் செய்திடவும்
கருதிடும் நல்லடியார்க்கு சித்தாந்த சாத்திரங்கள்
ஞானநூல்கள் போதிக்கவும் நாவலர் துணைநின்றார் 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு திருமுறைகள் பண்ணோடிசைத்திட
சுப்ர மண்ய ஓதுவாரை இங்கு வரவழைத்து
எண்ணரிய ஓதுவார்கள் பலரையும் உருவாக்கி
சாரங்கி வாத்யத்தோடு பாடும் வகை கூறி
தன்னரிய சிவபூசை செய்கின்ற போதினிலே
மாணவன் செந்திநாதையர் சாரங்கி இசைத்திட
இன்னமுத மாம்சாரங்கி அமுத இசை கேட்டு
மன மகிழ்ந்து நிதம் பூசை நாவலரும் செய்தார் 43

திருக்கோவில் தரிசனத்தை முறைப்படி அனுசரிக்க
சிவதீட்சை செய்யடியார் திருநீறு அணிய
திருக்கோவில் வழிபாட்டில் திருமுறைகள் ஓதி
சிவநாமம் சொல்லியே திருத்தொண்டு செய்ய
திருவிழாக் காலங்களில் திருப்பவனி கண்டு
ஆசாரத்துடன் மறைபாடி தாளங்கள் கொட்டி
பெருமானின் திருவுலாவில் பஜனைகள் செய்து
திருக்கூத்தாடிடவும் நாவலர் சொன்னார் 44

சைவாகம உணர்ச்சியும் மனதில் மேம்பட
தனமும் பூமியும் தானம் கொடுப்பதால்
சைவ பிரசங்கம் செய்வதற்கு உகந்த
உபாத்தி யார்களை முறையே தெரிவு செய்து
விவேகமும் விருப்பமும் கொண்ட மாணவர்க்கு
கல்வியை ஊட்டுவதே உத்தம தர்மமென
சிவதரு மோத்திரம் என்னும் உபாகமத்தில்
முருகன் அகத்தியர்க்கு உபதேசித்ததைச் சொல்வார் 45

அந்நியர் பிடியினில் அகப்பட்ட தமிழரின்
பண்பாட்டை காத்து சைவம் மேலோங்க
செந்தமிழ் அறிவினை சீர்பெறச் செய்து
நீதி நூல்களை முறைப்படி உணர்த்தும்
பைந்தமிழ் கூடங்கள் ஊர்களில் நிறுவி
பாடவிதானங்கள் சரிவர வகுத்து
வந்தனைக்குரிய நம் பெற்றோரை மதித்து
தானங்கள் தர்மங்கள் செய்திடச் சொன்னார் 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7)புராணபடனம் பற்றி நாவலர்

பணி செய்து கிடப்பதே நங்கடன் எனவுணர்ந்து
திருக்கோவில் தனிலே புராணபடனஞ் செய்ய
மண்டபத் தினிலே மகர தோரணங்கள் கட்டி
சிவபுராண நூலினை பீடத்தில் வைத்து
நறுமணத் தூபங்கள் தீபங்கள் காட்டி
பூசைகள் செய்து ஆசனத்து அமர்ந்து
புராணத்தின் காப்பினை சொல்லி ஆரம்பிக்க
சுப தினத்தில் சுப முகூர்த்தத்தில் தொடங்குவரே 47

புராணம் வாசிக்கும் அடியவர் மண்டபத்தில்
வடக்கு முகமாக அமர்ந்து வணங்கி
திருச்சிற்றம்பலம் சொல்லி ஒவ்வொரு பாடலையும்
ஏற்ற பண்ணிசையில் தெளிவுற வாசிக்க
உரை சொல்லும் பெரியவர் கிழக்குமுகமாகவிருந்து
பாடலை வாசிக்கும் பண்ணிலே பொருள் சொல்லி
பெருமான் காலடியை நித்தந் தொழுது
காப்பும் திருச்சிற்றம்பலம் சொல்லி முடிப்பர் 48

இலக்கிய உணர்வினை இரசிக்கச் செய்திட
ஒவ்வொரு பாடலையும் பிரித்து வாசித்து
இலக்கியச் சிறப்பின் சமய நோக்கினையும்
மேற்கோள் காட்டி உரைகள் சொல்லவும்
இலக்கணக் குறிப்புகள் வழுவா வண்ணம்
செய்யுள் இலக்கிய முறைகளைச் சொல்லி
சொற் பொருளுக்கேற்ப நீதிக் கதைகளையும்
சமூகத்திற்குச் சொல்லி புராணங்கள் படிப்பர் 49

திரும்பத் திரும்பப் படிக்கினும் கேட்கினும்
தெவிட்டாது தித்திக்கும் கந்தபுராணத்தின்
திருவிருத் தங்களை சிந்தித்து தெளிந்தால்
உள்ளத்தில் ஊற்றெடுக்கும் மெய்யுணர்வினை
கருதிநாம் பதியிலக்கண சிறப்பை கண்டின்புற்று
வாழ்வினில் பல்வளமும் உண்டாகும் பேற்றினை
மரபுவழி அனுபவத்தால் உணர்ந்த உண்மையென
சத்தியம் செய்து நாம் முக்காலும் போற்றுவோம் 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. நாவலரின் பிரசங்கம்

1) 1847. 12 .31 -வெள்ளிக்கிழமை-பிரசங்க மழை

மங்கல மணியோசை கணீரென் றொலிக்க
வண்ணைச் சிவன் கோவில் மண்டபத்தின் கண்ணே
பிலவங்க வருடத்தில் மார்கழி மாதத்தில்
சுக்கிரவாரம் கூடிய சுவாதி நட்சத்திரத்தில்
குலவிடும் சாத்திர முறைகளைப் பேணிட
விக்னேஸ்வரற்கு தேங்காயுமுடைத்து
நலமாக சைவ சமயம் தழைத்து ஓங்கிட
நாவலர் பிரசங்க மழையினைப் பொழிந்தார் 51

சுக்கிர வாரங்களில் பிரசங்கம் தொடர்ந்து
நிறைவாக நாவலர் செய்து வருநாளில்
தக்கதொரு தலைப்பின்றி ஆயத்த மில்லையென
மூன்று முறைகள் உரக்கக் கூவினார்
அக்கறை யோடு நாவலர் பீடிகை போட்டபின்
ஆயத்தமில்லை நாம் மரணத்திற்கு என்றே
மிக்க சுவையுடனே தித்திக்க பேசியே
யாவரையும் சாமர்த்தியமாய் வியக்க வைத்தார் 52

பட்டாடை தரித்து கொத்து வடம் பூண்டு
தலையிலும் கழுத்திலும் உருத்திராட்சமணிந்து
சுட்ட வெண்ணீற்றை திரிபுண்டரமாய்த் தரித்து
புராண படனமும் பிரசங்கம் செய்கையில்
வெட்ட வெளியிலும் வசீகரிக்கும் குரலிலே
சிவாகமங்கள் உணர்த்தும் முப்பொருள் உண்மையை
தெட்டத் தெளிவாக நாவினிக்க பேசி
பண்ணிசை சொட்ட பாடலும் பாடுவார் 53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்கள் சொல்லும் முப்பொருள் உண்மையை
செந்தமிழ் நடையினில் சுருக்கச் சொல்லி
நாவாரத் திருமுறைகள் புராணங்கள் உணர்த்தும்
சிவன் திருவிளையாடல்களை சீர்பெறச் சொல்லி
சைவ சமயத்தின் தத்துவ நெறிகளை சொல்லி
சிறுவர் முதல் பெரியவர்களைச் சிந்திக்கச் செய்திட
நாவலரின் உரைகளோ தெளிந்த நீரோட்டமாய்
பெருகுவதைக் கண்டு யாவரும் அதிசயிப்பர் 54

நாவலரின் பிரசங்கம் கேட்டவர்கள் தாமாக
மது மாமிச போசனையை அறவே கைவிட்டதும்
கோவில்கட்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்தும்
தோத்திரங்கள் ஓதியும் தேவாரம் பாடியும்
விரதவனுட்டானங்களை முறையாகத் தொடங்கியும்
தர்மங்கள் செய்து தானங்கள் வழங்கியும்
சிவனையே வணங்கி நின்று திருவிழாக்கள் கண்டும்
சிவசின்னந் தரித்தும் புராணங்கள் படித்தனர் 55

### மதுரை மீனாட்சி அம்மன் சந்நிதி டிசம்பர் 1863

மதுரை மீனாட்சி அம்மன் சந்நிதியில்
திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தயவினில்
மதுரை சொக்கநாத மூர்த்தியின் பெருமையும்
அத்தலத்தின் தீர்த்தச் சிறப்பையுங் கூறி
சித்தாந்த விளக்கங்கள் விரிவாகச் சொல்லிட
நாவலர் செய்த பிரசங்கத்தை கேட்டபின்
அம்மைக்கு சாத்திய விபூதிப் பிரசாதமும்
பரிவட்ட மாலையும் சாத்திப் பாராட்டினர் 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கத் தலங்கள் பலவற்றை தரிசித்தபின்
குன்றக்குடி என்னும் ஊருக்குச் சென்று
திருவண்ணாமலை மடத்தின் கண்ணே தங்கி
சைவசித்தாந்த உயர்வைக் கூறிட
பண்டாரச் சந்நிதிகள் யாவருமே மகிழ்ந்து
பல்லக்கிலேற்றி வாத்தியங்கள் முழங்க
சென்னைப்பட்டணம் பிரவேசம் செய்திது
விருதுகளுடனே நாவலர் வந்தார் 57

முப்பொருள் உண்மை தனை எளிதில் உணரத்தும்
செந்தமிழ் நடையும் இலக்கண அமைதியும்
ஒப்புயர்வுடனே பதியின் பற்றுடையதாய்
உள்ளத்தை உருக்கி கண்ணீர் பெருக்கிட
இப்பாற் கேட்பவரை தித்திக்க செய்தும்
அப்பாற் கேட்பவரை விரும்ப செய்தும்
மெய்ப்பொருள் கூறும் பேராற்றலை கொண்ட
சொல்லமுதம் தருபவர் நாவலர் மட்டுமே 58

சென்னை மாநகர் வழியில் திருவாவடுதுறை சென்று
ஞானதேசிக ராம் அம்பலவாண தேசிகரை
மனதார வழிபட்டு திருமடத்திற் தங்கி
திருமந்திரப் பாடல்களின் ஐயப்பாடுகள் களைந்து
ஞானதேசிகர் சந்நிதியில் பிற புலவர்களும் கேட்க
சைவ சித்தாந்த நற்பேருரை நிகழ்த்தி
மனதார யாவரினதும் பாராட்டும் பெற்று
நாவலர் பட்டத்தை ஆறுமுகன் பெற்றார் 59

தமிழும் சைவமும் தம்மிரு கண்களென
தரணியில் பணிசெய்த நல்லை நகர் நாவலர்
தமிழிலும் சைவத்திலும் பாண்டித்தியம் பெற்றதனால்
நாவலர் பட்டத்தினைப் பெற்று மிகவுயர்ந்தார்
தமிழும் சைவமும் தழைத்து ஓங்கிட
அளப்பரிய நூல்களை அச்சேற்றித் தந்தார்
தமிழும் சைவமும் உயிர்ப்புடன் ஒளிதந்திட
பிரசங்கம் பிரசாரம் நாட்டினில் செய்தார் 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிரபவ வருடம், ஆடி 24 யூலை 1867)

இராமலிங்க வள்ளலாரின் பாடல்களைவிமர்சித்தார்

திருமுறையாளர்கள் பகர்ந்த பாடல்களை
அருட்பாடல்கள் அல்லவென வள்ளலார் சொல்லி
இராமலிங்க வள்ளல் தாம் இயற்றிய பாடல்களை
நித்தம் பாராயணம் செய்யப் பணித்தபோது
திருமுறைப் பாடல்களே அருட்பாடல்கள் என்பதை
நாவலர் எதிர்த்து வாதஞ் செய்கையில்
திருவருள் பெற்றநம் சமயக்குரவர்களின்
அற்புதங்களை விரிவாக நாவலர் உரைத்தார் 61

சிதம்பரம் வீதியில் வித்தியாசாலை நிறுவி
வள்ளலார்பாடல்கட்கு எதிர்வாதம் செய்து
சேதுபுராணம் இலக்கண விளக்கச் சூறாவளி
எனப் பல நூல்களை வெளியிட்ட பின்னர்
சிதம்பரம் தருமபுரம் தலங்களை வணங்கி
யாழ்ப்பாணம் வந்த நாவலர் பெருமானை
முதுபெரும் தத்துவஞானியாய் வரவேற்று
மகோன்னத கௌரவஞ் செய்தனர் மக்கள் 62

## டிசம்பர் 5,1879இறுதிப் பிரசங்கம்

பிரமாதி வருடம் ஆடி மாத சுவாதியில்
"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" தலைப்பில்
குரவராம் சுந்தரமூர்த்தி குருபூசை நாளில்
யாழ்ப்பாணப் பிரகாச வித்தியாசாலையில்
பிரசங்கம் செய்த பின் "கைம்மாறு கருதாது
முப்பத்து இரண்டு ஆண்டுகள் சைவத்தின்
கருவூலங்களைப் போதித்து வந்தேன்"எனக் கூறிய
நாவலர் இறுதிப் பிரசங்கம் இது வென்றார் 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்கள்– பூசகர்கள்

சிவனை வழிபடும் சைவர்கள் முறையே
சதாசிவ மூர்த்தியின் பஞ்சருஷி கோத்திர
ஆதி சைவராய் ,வைதீக பிராமணருள் சிவ தீட்சை
பெற்றவர் மகா சைவராய்,வைசிகர் சத்திரியர்
சிவ தீட்சை பெற்றவர் அனு சைவராய்,சூத்திரருள்
தீட்சை பெற்றவர் அவாந்தர சைவராய்,
அனுலோமருள் சிவ தீட்சை பெற்றவர் பிரவர
சைவராயும் ஏனையோர் அந்திய சைவரே 64

சிவ தீட்சை பெறாத பிராமணர் கையால்
திருநீறு வாங்காமலும் அவரை வணங்காமல்
சிவாகமப் பிரகாரம் பிரதிட்டை செய்த திருக்
கோவில்களில் அவர் பூசை செய்தலை தவிர்த்தார்
சைவ மார்க்கத்தினில் ஒழுகிடும் பிராமணரை
வணங்கவும் மரியாதையும் செய்து நின்றார்
இவர்களே சிரார்த்தம் விவாகக் கிரியைகள்
தானங்கள் செய்திட நாவலர் முன்னின்றார் 65

நால்வகை திறத்தாரும் வழிபடும் சிவலிங்கத்துள்
சரியையாளர்கள் சிவமாய் வழிபடுவர்
சாலச் சிறந்த மந்திரங்களால் பூசிப்பவர்
கிரியைகளால் வழிபடுவர் மேலும்
சீலமாக யோகியர் தத்தம் இதயத்திலே
சாத்திடும் மந்திரங்களால் வழிபடுவர்
மோனநிலை ஞானியர் தமதன்பினால் நினைந்து
தம்மையே சிவமாக்கி வெளிப்பட்டு நிற்பர் 66

(சென்னை திருத்தொண்டை நாட்டுப்பதி புண்ணிய பரிபாலன சபையிற் செய்த பிரசங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 நல்லூர் முருகன்

சிங்கை யாரியச் சக்கரவர்த்தி மந்திரி
புவனேக பாகு கட்டிய நல்லூர் கோவில்
பங்கமுற போர்த்துக்கேய அரசாட்சியினர்
இடித்தே அழித்து நிர்மூலமாக்கினர்
மங்கிய கோவிலை இரகுநாத மாப்பாணர்
ஒல்லாந்தர் காலத்தில் மீளவும் கட்டி
மங்களமாய் ஒரு வேலையும் நாட்டியே
நல்லூரில் மீண்டும் பிரதிட்டை செய்தார் 67

ஆகம விதிப்படி அமையப் பெறாத
கோயிலை வழிபட நாவலர் மறுத்தார்
ஊகமாய்க் கந்தையா மாப்பணர் வேண்டிட
கோயிற் குற்றங்களை நாவலர் சொன்னார்
சீக்கிர மாகவே கோயிற் சந்நிதியில்
மாப்பாணர் சபையினைக் கூட்டியதும் அங்கே
ஆக்க பூர்வமாகவே ஆகமவிதிப்படி
கோயிலமைத்திட நாவலர் வழி சொன்னார் 68

ஆண்டுதோறும் அந்தக் கோயில் திருவிழாவில்
நடந்தேறும் ஆட்டுக் கொலைகளை யாங்கு
மீண்டும் ஒருமுறை இடம்பெறாதிருக்க
சத்தியம் ஒன்றினை நாவலரும் பெற்றார்
கொண்ட சத்தியத்தை மீறியதால் நாவலர்
கோபங்கொண்டு மடத்தை விட்டகன்று
வேண்டுமென்றேயவர் கோயிற் குற்றங்களை
பத்திரிகை இரண்டினில் (அவர்) வெளிப்படுத்தினார் 69

தொல்லூராம் நல்லூரான் எல்லோரும் போற்றிட
பல்லூரார் வணங்கிடும் முதன்மைக் கோயிலாய்
நல்லோர் கூடியேநின்று வியந்திடும் மேன்மையை
புலவர்கள் பாட்டினில் நாமும் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 நாவலரின் தமையனாரது மகள் காலமானபோது சென்னையில் இருந்து கடிதம் – அனுதாபச் செய்தி ( ஏளத்திரீ. ஆடி. 27)

நீர்க்குமிழி போன்ற நிலையில்லா வாழ்வினில்
புண்ணியங்கள் பல செய்து புனிதமடைவீர்
அருகிலுள்ள கைலாய பிள்ளையார் கோவிலின்
கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைப்பீர்
அரிய செயலிதனை புத்திரியின் நினைவாக
அவள் பெயராலே திருப்பணி செய்திட
பெருநிதியைக்கொண்டு நீர் செய்திடும் வண்ணம்
பிரிய தன் சகோதரனிடம் விண்ணப்பம் செய்தார் 70

நித்திய பூசைகள் நியமமாய்ச் செய்திடில்
வான் மழை பொழியும் நெல் வளம் பெருகும்
சத்திய வழியினில் அரச நீதி நிலைக்கும்
பக்தி நெறியினால் பணிகள் நிறைவுறும்
உத்தம மானநற் கோயில்கள் சிதைந்தால்
ஆகம விதிப்படி புனருத்தாரணஞ் செய்து
சித்திகள் பலபெறுவீர் சிறப்புடன் வாழ்வீர்
சிந்தைக்கினிய நற்செயலிதுவன்றோ 71 அ

மனைவி மக்கள் சுற்றம் முதலாம்
உறவுகள் உடன் நாம் வாழ்ந்தாலும்
அனைத்து தொழில்கள் வேளாண்மை முதலாம்
லௌகிகங்களை யாம் செய்தாலும்
வினைகள் தந்திடும் கொலை களவு
தவிர்த்தே புண்ணியம் செய்தாலும்
சிவனைக் கணமும் சிந்து வழிபட்டு
திருவடிப் பேற்றினை அடைந்திடலாம் 71 ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 நாவலரின் சமூகப்பணி (1876/77

வான் பொய்த்த போதினிலே
கோதாரி நோயினால்
மக்களும் துன்புற்று வருந்தினர்
வான் தொட்ட விலையினில்
பொருட்களும் இன்றியே
பலரின் உயிர்கள் பறிபோயின
ஊன் உயிர் நோயினால்
மக்களும் இறக்கையில்
அவர்களைப் புதைத்த பின்னர்
ஏன் என்றும் கேட்காது
இறந்தவர் வீட்டை கொளுத்திட
அதிகாரிகள் முன்னின்று செயற்பட்டனர் 72

வயலிலும் விளைச்சலில்லை
விதைக்கவோ நெல்லும் இல்லை
மக்கள் எங்கு செல்வார்?
நயவஞ்சக மாகவே
கைக்கூலி பெற்று சிலர்
விதை நெல்லோ கிடைத்ததென்றார்
தயவுடன் நீதியை
தட்டியே கேட்டிட
நாவலர் துணிந்து எழுந்தார்
உயரிய சபையினில்
இருபத்தொரு குற்றங்கள் சுமத்தி
நாவலரும் நேரில் வாதிட்டார் 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் மிகுந்த காலத்தில் கொடிய
வாந்தியும் பேதியும் ஒன்றாகச் சேர்ந்திட
தஞ்சம் என வந்த மக்களுக்கு நன்கே
கஞ்சியும் மருந்தும் கொடுத்த நாவலர்
வஞ்சகம் தீர்த்த ஆட்சியாளர்களின்
அட்டூழியங்களை அம்பலப்படுத்தி
நெஞ்சினில் துணிவுடன் அரசினை எதிர்த்து
சீர்திருத்தம் செய்ய சீறி எழுந்தார் 74

நீதிமன்றங்களை நடத்திய நாவலர்
குற்றம் இழைத்தோரைக் கண்டுபிடித்தார்
நீதி நிலைத்திட குற்றத்தை நிரூபிக்கும்
வழக்கறிஞர் போல் செயற்பட்டார்
நீதிபதியாலே தீர்ப்பளித்த உயர்
மனிதனாகவும் செயற்பட்டு
நீதியை நிலைநாட்டி யாவரும் போற்றிடவே
தர்மத்தைக் காக்க முன் நின்றார் 75 அ

நிர்வாண தீட்சை பெற்ற சுப்ரமணிய மாணவரோ
நோயின் பிடியினிலே சிக்குண்ட போதினிலே
சிரமமே பாராது அடிக்கடி பார்வையிட்டும்
வைத்திய சிகிச்சையினை முறையாகச் செய்வித்தும்
மரணத்தின் பிடியினிலே அகப்பட்டு இறந்த போது
அன்னாரின் அந்தியக் கிரியைகளைச் செய்வித்தும்
இரங்கற் பாக்களாம் இருபதினை எழுதியே
அன்னாரின் சரிதத்தையும் நூலாக்கி வெளியிட்டார் 75 ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 நூல்கள் பதிப்பித்தல்

சைவர்களுக் கனுகூலமாய் சமய நூல்கள் பதித்திட
சென்னைக்கு சென்று அச்சியந்திரம் கொணர்ந்து
ஆவலுடன் வண்ணார் பண்ணை வீட்டினில் தாபித்து
வித்தியானுபாலன இயந்திர சாலை எனப் பெயரிட்டு
பாவலராய் பண்டிதராய் இலக்கணப் பிழைகளின்றி
பாலபாடம் முதல் தாமியற்றிய நூல்களையும்
சிவாலய தரிசன விதி பெரிய புராண வசனம்
முதலிய பல்வேறு நூல்களையும் பதிப்பித்தார் 76

செந்தமிழ் புலவர்கள் செப்பிடும் கவிதையில்
நாவலர் உரையையே புகழ்கின்றார்
சுந்தர பாடல்கள் கவினுறப் பாடிட
நாவலர் உனக்கு நிகர் யாரோ !
நந்தமிழ் உறவுகள் இலகுவில் கற்றிட
உரைநடை வசனங்கள் தந்திடுவாய்
பைந்தமிழ் உரைதனில் பரவசம் தந்திடும்
பணிகளை நினைத்தே உருகிடுவோம் 77

ஆயிரம் ஆயிரம் தமிழர்கள் கூடினும்
உன்னைப்போல் தமிழ் சைவம் வளர்ப்பரோ?
ஆயிரம் வசதிகள் இன்றிங்கே இருப்பினும்
நூற்பல தமிழினில் பதிப்பாரோ ?
ஆயிரம் பிரசங்கம் யாரிங்கு செய்தாலும்
நாவலர் பட்டம் கிடைத்திடுமோ ?
ஆயிரம் அடியவர் இங்கே வாழ்ந்தாலும்
சிவபூசை சிவக் கோலம் கொள்வாரோ? 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் தேவார திரட்டு –1866

தேவாரத் திருமுறை ஏழும்
அடங்கிய அடங்கன் முறையை
நாவார நாள்தோறும்
ஓதி நாம் பயன் பெறவே
பாமாலை பதிகங்கள்
இருபத்தைந்து தேர்ந்தெடுத்து
அகத்தியர் திரட்டொன்றை
நாவலர் பதிப்பித்தார் 79

நாவலரின் நன்னெறியில்
நாமும் வழிநின்று
காவலராய் வாழ்வினிலே
பணி செய்ய முன்வரின்
ஆவலுடன் தமிழ் சைவம்
ஓங்கி வளர்த்திடவே
பாவலரும் பாமரரும்
உலகில் நீடு வாழ்வார் 80 அ

தென்னகத்து ஆதீனங்கள் செய்திட முடியாதவற்றை
சிவஞானம் பெற்றவொளிப் பிழம்பாகி நின்று
அன்னவர்கள் வியந்திடவே பிரசங்கம் செய்து நின்று
பட்டங்கள் பரிவட்டம் பல்லக்கு கௌரவத்தால்
உன்னதநற் சேவையினால் அருநூல்கள் பதித்திடவும்
புராணங்கள் திருமுறைகள் உள்ளார்த்தம் விரித்திடவும்
வன்னெஞ்சம் கொண்டவர் வாழ் நாளைத் தியாகம் செய்து
பணிசெய்து காட்டியதே நாவலரின் நெறியாகும் 80 ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 கீரிமலை சிவன் கோவில் புனருத்தாரணம்
(1878 மே-வெகுதான்ய வருடம் வைகாசி 24)

கீரியின் முகமுடைய நகுல முனிவரும்
முசுகுந்தச் சக்கரவர்த் தியுடன் யாத்திரை செய்து
கீரிமலைக்கு சென்றங்கு புனித தீர்த்தமாடி
கீரி முகம் மாறியே திரும்பிச் சென்றதும்
மாருதப் பிரவல்லியின் குன்ம நோயையும்
குதிரை முகத்தையும் தீர்த்தமாடி நீக்கிய
புராதன சிவாலயம் போர்த்துக்கேயரால்
இடித்தழிக்கப்பட்டதை எண்ணினார் நாவலர் 81

"கீரிமலைச் சிவன் கோவில்" என்ற பத்திரிகையை
நாவலர் வெளியிட்டு சிவாலயம் கட்டிட
பேராசை கொண்டு காலமும் இடமும்
கணக்கினில் கொள்ள சோதிடர் சிற்பியின்
ஆராய்ச்சியின் படி கொள்கைகள் வகுத்து
மாவிட்ட புரத்தின் கந்தசாமி கோவிலின்
மரபு வழியில் வந்த பூசகர்கள் ஆசியுடனே
உள்ள நிறைவுடனே திரும்பினார் நாவலர் 82

மூர்த்தி தலம் தீர்த்தம் சிறப்புடன் விளங்கும்
கீரிமலை தீர்த்தத்தில் புண்ணிய நீராடி
சிரார்த்தங்கள் செய்த பின் சிவலிங்கத் தரிசனம் பெற்ற
நகுலேஸ்வரர் கோயிலை அந்நியர் அழித்தனர்
திரும்பவும் அவ்விடத்தில் கோயில் தனை அமைத்து
நித்திய பூசைகள் தொடர்ந்து இடம்பெற
தருமங்கள் செய்யும் பிரபுக்களிடம் விண்ணப்பித்து
"யாழ்ப்பாணச் சமயநிலை" பிரசுரம் வெளியிட்டார் 83

பிரமாதி வருடமதில் சோதிட வித்வான்
நல்லூர் இரகுநாத சாஸ்திரியுடன் சிற்பி
அராலியூர் சுவாமிநாதரும் கீரிமலைக்கு வந்து
கார்த்திகேயக் குருக்கள் சபாபதி குருக்களுடன்
ஆராய்ந்து சிவன் கோவில் கட்டிட நிலையம் குறித்து
பலரிடமும் விண்ணப்பித்து ஒழுங்குகள் செய்து
திருப்பணியை முன்னெடுக்கும் பிரபுக்களை பிரேரித்து
பூரண திருப்தியுடன் விடைபெற்றார் நாவலர் 84


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 நாவலரின் சமய வாழ்வு

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலின் கண்ணே
தட்சணாமூர்த்தி சன்னிதானத்து இருந்து
வணங்கி திருமுருகாற்றுப் படை பாராயணமும்
பஞ்சாட்சர செபமும் செய்த நாவலர்
பண்டிதராய் பார்சிவல் பாதிரியார் தமக்கு
தமிழினைப் புகட்டி வருகின்ற காலத்திலும்
வெண்ணீறணிந்து விவிலிய வேதத்திற்கு
செந்தமிழ் நடை தந்து சமய மரபைக் காத்தார் 85

என்னை வளர்த்திட ஜய வருடம் முதல்
ஆங்கிலம் கற்று புலமை பெற்றேன்
அன்னவர் துரைக்கு பிலவ வருடத்தில்
தமிழும் கற்பித்து உதவி செய்தேன்
அன்னை வயிற்றில் பிறந்த சகோதரர்
பொருளுதவிகள் நான் பெற்றதில்லை
சென்னையில் புத்தகம் அச்சிடும் காலத்தும்
பஞ்சத்தால் நைவேத்தியம் உண்டேன் என்றார் 86

தமிழ் குலம் நன்றே உலகப் புகழெய்தத்
தாழாதுஞற்றுங்கள் அஃதொன்றே
தமியனுக்குத் தமிழர் செய்கைமாறென
உரைத்த நாவலர் அயராது பணிகள் செய்து
சமயம் வாழ தமிழ்மொழியும் வாழ
அறிவுக் கூடங்கள் பலவும் அமைத்து
இமயமாய் உயர்ந்து நின்றார் நாவலர்
தமிழ் உலகம் என்றும் வணங்க 87

சிவபூசை செய்திட சிறு வயதில் விரும்பி
பரம்பரைக் குருவான வேத குட்டிக்குருக்ககளிடம்
தவமான சமயதீட்சை முறைப்படி பெற்றபின்னர்
வயது முப்பதிரண்டு நடக்கும் போதினிலே
பவமான நிர்வாண தீட்சையையும் பெற்று
பூசைக்கிரமங்களிலும் ஆசாரம் காத்து
தவறாமல் சமயா சாரிகளின் குரு பூசைகளும்
விரதங்களும் அனுட்டித்து பிரம்மச்சரியம் காத்தார் 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21 (டிசம்பர் 5.1879)**

பிரமாதி வருடம் கார்த்திகை மாதத்தில்
தனது வீட்டின் நடுவறையில் அங்குமிங்கும் உலாவி
பரவசமாகி "அல்லிக்கமலத்து" திருவாசகம் ஓதி
கரங்கூப்பிக் கைதொழுது கண் மூடித் தியானித்தார்
சிரமமாய் நோயுண்டாக செவ்வாய் பதினெட்டில்
வேதாரண்ய சைவாசிரியர் இருநாள் பூசை செய்ய
பூரித்துக் கையதனில் நிரம்பிய மலர் கொண்டு
ஒவ்வொரு பூக்களாக தலையினில் வைத்தார் 89

தேவாரம் முதலாம் அருட்பாக்கள் ஓதி
புண்ணிய தலங்களில் திருநீற்றை அணிந்து
நாவாரப்பஞ்சாட் சரஞ் சொல்லி கங்காதீரத் தமும் உண்டு
சிரசின்மேல் கைகுவித்து சிந்தனையை ஒடுக்கி
சிவனையே நினைத்துருகி கண்ணீர் மழை பொழிய
பிரமாதி வருடத்து கார்த்திகை இருபத்தொன்றில்
தவமான மக நட்சத்திர சுக்கிர வாரந்தன்னில்
சப்தமி திதியிலே அமரரானார் நாவலர் பெருமான் 90

வயதோ ஐம்பத்தாறு மாதமோ பதினொன்று
நாட்கள் பதினாறு சனிக்கிழமை நன்னாளில்
பயபக்தியுடன் நாவலரின் புகழுடம்பின் மீதினிலே
விபூதி ருத்ராட்சம் பட்டுப் பீதாம்பரமணிவித்து
உயர்வான பூந்தேரில் அழகான பாடையமைத்து
நாலாபுறமும் சூழ்ந்து நல்லடியார் சிவநாமம் சொல்ல
தயவுடன் நமச்சிவாய தேசிகரின் கிரியையின் பின்
பரிமளமான சந்தனக் கட்டையில் தீயுடன் சங்கமமானார் 91

பிரம்மச்சரிய விரதந்தனை வாழ்வினில் பூண்டு
அரும்பெரும் சேவைதனை தமிழுலகிற்கு ஆற்றி
வரம்பெற்ற ஐம்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்து
சைவ திருக் கோலத்துடன் வாழ்வினில் உலாவி
பிரசங்கம் பிரசுரம் பிரச்சாரங்கள் செய்து
சைவப் பாடசாலைகள் பலவும் உருவாக்கி
கருமமே கண்ணாகத் தமிழ் சமய நூல்கள் படைத்து
தமிழ்த்தாயின் தலைமகனாக நாவலர் வாழ்ந்தார் 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழியும் தென்தமிழும்
புலமை பெறக் கற்று
கடினமான வேதாந்தம்
சித்தாந்தம் தெளிந்து
நடமாடித் தமிழ் சைவம்
தழைத்திட உழைத்து
திடமான சிவக்கோல
மேனியனாய்த் திகழ்ந்தார் 93

நாவலரின் நற்பணியை
நாள்தோறும் நயந்தேத்தி
பாவலராய்ப் பண்டிதராய்
பணி செய்து வாழ்ந்து காட்டி
காவலனாய் செந்தமிழின்
தீஞ்சுவையை பரப்பிய
நாவலனின் வழியினிலே
வாழ்ந்திடுவீர் உலகுய்ய 94 அ

இளமையின் கனவெல்லாம் இறைபணியே செய்திடவும்
நலிவுற்ற சைவத்தை புனரமைத்துக் காத்திடவும்
அளவற்ற ஏடுகள் பல சிதைவுற்ற வேளையிலே
அழிந்திடாமல் அவற்றையெல்லாம் நூலாக்கம் செய்திடவும்
உளமாரச் சைவத்தின் மேன்மைதனை உயர்த்திடவும்
திருமுறைகள் புராணங்கள் புனிதத்தைப் பேணிடவும்
தளராமல் செயலாக்கி பிரசங்கம் செய்திடவும்
தன்வாழ்வை அர்ப்பணித்து துறவறம் பூண்டு நின்றார் 94 ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 ஆறுமுக நாவலரை பூமிகழைத்தல்

சிந்தைக் கினியநற் திருக்கோவில் விழாக்களை
சீர்தூக்கிப் பார்த்திட நேரலையிற் பார்க்கவாராய்
விந்தையிது வானூர்தி வாகனங்களில் வட்டமிட்டு
சலிக்காமல் வணங்கிடவே வசதி பல செய்துள்ளாரே
நந்தமிழில் நூல் பலவும் நயமாக வண்ணமதில்
விரைவாகக் கணனியில் அச்சேற்றி மகிழலாமே
செந்தமிழின் சீர்மைதனை ஒலிஒளி பரப்புகளில்
கேட்டிடவும் பார்த்திடவும் நாவலா ஓடிவாராய் 95

விரும்பிய இடமெல்லாம் வேண்டிய நேரமதில்
வந்திங்கு பார்த்திட நாவலாயுனை வேண்டுகின்றேன்
அரும்பெருங் கோபுரங்கள் எங்கும் ஓங்கி வளர்ந்த
திருக்கோயில் தரிசிக்க நாவலா இங்கு வாராய்
கரும்பொடு தேன் கலந்த பண்ணிசை வண்ணங்கள்
புராண படனங்கள் அடியவர் பாடுகின்றனரே
முருகனின் திருக்கோலம் தொழுதிட அனுதினம்
நல்லூரினில் கூடுகின்ற காட்சிதனை பார்த்திடுவாய் ! 96

ஊர்கள் தோறும் நற்சங்கு மணியோசை கேட்கத்
திருக்கோயில்கள் பொலிவுடன் திருவிழாக் காண்கின்றார்
சீர்பெறும் அடியார்கள் திருமுறை பாராயணஞ் செய்து
புராணங்கள் படித்தின்புற்று பயனும் சொல்வரே
வாரி வழங்கும் கலாசார அமைச்சும் பயனுறவே
அறநெறியை வளர்த்து சைவ நூல்கள் வெளியிடுவர்
பூரித்த மணிக் கோபுரங்கள் வானுயர வளர்ந்து
வரவேற்று கைதொழ நிமிர்ந்து நிற்கின்றதே 97

கீரிமலை தீர்த்தமதில் புனிததீர்த்தமாடியன்பர்
நகுலேஸ்வரர் திருக்கோயிலை வணங்கி வருகின்றார்
சிரார்த்தங்கள் செய்தபின் தானங்கள் செய்பவர்கள்
அழகிய புது மடங்களில் வழிபடும் காட்சி பாராய் !
திருக்கேதீஸ்வரக் கோயில் புண்ணிய திருத்தலமாய்
பிரசித்தமாய் விளங்கும் காட்சிபாராய் !
திரு மடாலயங்கள் அங்கு தொண்டுகள் புரிந்திடும்
திருப்பணிச் செயல்களை கண்டுகளிக்க வாராய் ! 98


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டு கிளி அன்னங்கள் குயில் புறாக் குருவிகளை
தூதுவிட்டு உந்தனையிங்கு அழைக்கலாமோ !
எண்டிசையும் தமிழினமோ தமிழ் சைவங்காத்திட
உலகெங்கும் நிதமும் உழைக்கின்றாரே
கண்ணிமைக்கும் நேரத்திலும் உந்தன் பணி போற்றியே
நாடெங்கும் உனைப் பணிந்து வாழ்கின்றாரே !
மண்ணுலகோ இக்காலம் தேவலோகம் போலவே
பொலிகின்ற காட்சிதனை நாவலா பார்க்க வாராய் ! 99

தமிழுஞ் சைவமும் பூத்துக்குலுங்கியே
பல்கலைக் கழகமதில் மணம் பரப்பும்
அமிழ்தினும் இனிய தமிழ்மொழி நாட்டிலே
தாய்மொழிக் கல்வியை ஊட்டி நிற்கும்
அமர்வுகள் அடிக்கடி இணையவழிதனில்
இணைந்திட அறிவுப்பசி எமக்கு நீங்கிவிடும்
சமயமும் தமிழும் இணைய வழிதனில்
இலட்சோப இலட்சம் நூல்களைத் தருகின்றதே ! 100

சுத்த போசனமும் நித்தஞ் சிவபூசையும்
செய்யும் உத்தமர்கள் பலரிங்குண்டு
பக்தி செய்யும் அடியார்கள் பலர் புராணங்கள்
திருமுறைகள் ஓதி வருகின்றார்
சித்தஞ் சிவன்பாலே வைத்திடும் அடியவர்கள்
சிவக்கோலம் தரித்திங்கு உலவுகின்றார்
முத்திக்கு உதவிடும் நற் திருக்கோயிற் பூசைகளை
ஆகமவி திப்படியே செய்து வருகின்றார் ! 101

பல்கலைக் கழகங்கள் இந்து நெறிக் கற்கையின்
பீடங்கள் தோன்றியே நாட்டினில் புதுமை செய்தார்
பற்பல ஆராய்ச்சி செய்தவர் பட்டங்கள் பெற்றிடும்
வல்லமையைப் பெறுகின்றாரே
நற்பல நூல்களும் சைவ நெறியினில்
ஆன்மீக நெறிதனை பரப்பிடுமே
துல்லியமான வழிகற்றிட நூலகங்கள்
கிராமங் கள்தோறும் அறிவை தருகின்றதே ! 102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் நெகிழ்ந்திட நாடு முழுவதும்
　　கோவில்கள் தோறும் மணியோசை கேட்கின்றதே
தஞ்சம் என்றேயடியார் ஒன்று கூடியே
　　தொண்டுகள் பலப்பல மனதார செய்கின்றார்
மிஞ்சிடும் வகையில் இந்துக் கல்லூரிகள்
　　தோன்றி எங்குமே சைவம் வளர்க்கின்றதே
அஞ்சிடாமல் அங்கே ஆயிரம் ஆயிரம்
　　சைவக் கல்விதனை ஆசிரியர் புகட்டுகின்றார் 103

சுபம்

## நாவலர் பெருமானுக்கு வாழ்த்து

அருளோங்கு நல்லூரில் ஆறுமுகனாய் உதித்தவனே வாழ்க
திருமுருகன் தந்ததமிழ்ச் செல்வத்தைப் பெற்றவனே வாழ்க
குருவாகி தமிழ்சைவம் போதனைகள் செய்தவனே வாழ்க
விருப்புடனே வாழ்வினிலே பிரமச்சரியங் காத்தவனே வாழ்க
திருநீறும் ருத்திராட்சமும் திருமேனியில் அணிந்தவனே வாழ்க
உருவான பிறமதங்கள் ஊடுருவதைத் தடுத்தவனே வாழ்க
பெருநூல்கள் பதிப்பித்து தமிழ்சைவம் வளர்த்தவனே வாழ்க
திருமுறைகள் திருப்புராணங்கள் ஓதிடமுன் நின்றாய் வாழ்க
பெருநோக்கில் சைவப்பிரகாச பாடசாலைகள் அமைத்தாய் வாழ்க
குருவாகி தமிழ் சைவம் வாழ பிரசங்கம் செய்தவனே வாழ்க
அருநெறிய சைவப்பரம்பரை உருவாக்கி வைத்தவனே வாழ்க 104

கற்றது கைமண்ணளவே நாவலனின் பணிகளையானோ
கற்றிடக் கிடைத்தது கடுகளவே- வாழ்நாளில்
நாவலனின் நற்பணியை நானிலமே போற்றி நிற்க
ஏவலனாய் பணி செய்வேன் யான் 105



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நாவலர் இயற்றிய பாமாலைகள்

(பணம் வேண்டி, தனது சிவபூசையில் பாடல் எழுதி இறைவனுக்கு விண்ணப்பம் செய்தமை)

2.1 மணி கொண்ட கடல்புடை கொளிந்நாட்டி
லுன் சமய வர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான்
கருதியிம் மைப்பொருட் பேறொழித்தே

கணிகொண்ட வித்தியாசாலை தாபித்திவ்வூர்க்
கயவர் செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதை நடாத்தப் பொருட்டுணை செயக்
கருதுவோ ரின்மை கண்டும்

அணிகொண்ட சாலைய தொழிப் பினஃ
துனையிகழு மந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்தெனெஞ் சற்பகற்றுயருற
லறிந்துமொரு சிறிது மருளாத்

திணி கொண்ட நெஞ்சவினி நின்முன்யானுயிர் விடுத
றிண்ணநீ யறியாத தோ
சிறியென தன்பிலர்ச் சனைகொளழ
கியதிருச் சிற்றம்பலத் தெந்தையே

( நாவலர் சரித்திரம் பக்கம் 34 த.கைலாயபிள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 சமய கூட்டமொன்றில் நாவலர் கண்மூடி நின்று பாடிய பாடல்

சீர்பூத்த கருவி நூலுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்கள் நீங்கப்
பரம் பூத்த சைவ நிலை பாரோர் தாங்கப்
பேர் பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறை பூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார் பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
மதம் பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்

(நாவலர் சரித்திரம் பக்கம் 58-த.கைசாலபிள்ளை)

## 2.3 புலோலி பசுபதீசுரர் திருவூஞ்சல் – 10 பாடல்கள்

### விநாயகர் காப்பு

சீர் பூத்த மலரயன்மா லிமையோர் போற்றுந்
திறம்பூத்த புலோலியில் வாழ் சிவனார் கொன்றைத்
தார்பூத்த சடையர் பசு பதியார் மீது
தமிழ்பூத்த ஊஞ்சலிசை தமியேன் பாட
ஏர் பூத்த மறை முதலி னிலகுந் தெய்வம்
இயல்பூத்த பிரணமா யினிது மேவுங்
கார்பூத்த கரடதட விகட கும்பக்
கயமுகவ னிருசரணாங் காப்பதாமே

## 2.4 விநாயக வணக்கம்

(பெரியபுராண வசனத்துக்கான விநாயக வணக்கம்)

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தின்
அரும்பொருளைச் சிவனார் தந்த
பேர் பூத்த நிருமலசின் மயவடிவை
ஆனந்தப்பெருக்கை என்றுங்
கார்பூத்த திருநெடு மா லயன்முதற்புங்
கவர்வணங்குங் கருணை வாழ்வைப்
பார்பூத்த அடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம் (1பாடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.5 அராலி.வண்ணபுரம்.சித்திவிநாயகர் துதி (1856 சித்திரை 5)

சீரேறு கருணை...........2 பாடல்கள்

2.6 அராலி.வண்ணபுரம்.விசுவநாத சுவாமி துதி (1856)

உலகெலாமாகி.....1 பாடல்

2.7 அராலி.வண்ணபுரம்.விசாலாட்சிஅ ம்மைதுதி (1856)

பொன்பூத்த .....1 பாடல்

2.8 நல்லை கைலாசபிள்ளையார்

சீர்கொண்ட........ 1 பாடல்

2.9 சிதம்பரம் நடராசப் பெருமாள்

மணிகொண்ட.....1 பாடல்

2.10 நல்லை சுப்ரமணிய கடவுள்

அருணவிகசிதகமல.....1 பாடல்.

2.11 அரிமழும்.சுந்தரேசர்.மீனாட்சி ....4 பாடல்கள்

திருக்கிளர்......

மெய்யறிவு....

அவனவனது....

அங்கியின்.....

2.12 கதிர்காமக் கந்தன் கீர்த்தனைகள் (6 பாடல்கள்)

1.உன்னிருபாததெரிசனஞ்-சாவேரி-ஆதி

2.ஏனிந்தகேடு நெஞ்சே-துஜாவந்தி-சாபு

3.நிருமலபரசிவ -சுருட்டி- ஆதி

4.இத்தனைகொடுவேதனை-ஆஹிரி-சாபு

5.என்மேலிரக்கமில்லையா-கல்யாணி-ரூபகம்

6.சிவகுருநாதருக்கு செயமங்களம்-அசாவேரி-ஆதி

2.13 "சனிநீராடு" என்னும் முதுமொழி பற்றிய சீட்டுக்கவி

மக்கர்குகு தத்தர்.......

சீர்மருவு கந்தனருள் மைந்தனா மாறுமுக

தீரன் எழுதுங் கடிதம்.......

தக்கசனி நீரா டெனுமவ்வை யார்-மொழி

தனக்கு ரைதனைப் பகரிடிற்

சனிவார மதிலெண்ணை யிட்டுவெந்நீரினிற்

தலைமுழுக வென்பதாகும்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.14 தமது ஆசிரியர் நல்லூர் .ம.சரவணமுத்து முதலியார் பேரில் எழுதிய இரங்கற்பாக்கல் (1845) 4பாடல்கள்

2.15 நாவலர் மாணவரும் .அவரது வித்தயாசாலை உபாத்தியாயருமாகிய வி.சுப்பிரமணிய பிள்ளை பெரிற் கூறிய இரங்கற் பாக்கள்(1873) 20பாடல்கள்

என்னுடைய கண்மணியே எனதன்பர் சிகாமணியே
பின்னமறு புகழ்பொலிசுப் பிரமணியப் பெருந்தகை நீ
என்னையுனக் கன்னைபிதா வினியகுரு வென்று முன்னர்ச்
சொன்னதென்னை பின்னரென்னைத் துறந்ததென்னை சொல்வாயே

(முதலாவது பாடல்)

யான்பிழைத்தல் வேண்டுமென்ப தெனதைய நின்விருப்பே
யான்பிழையா தேமரிக்கின் என்கிரியை அனைத்தையும் நீ
தான் பிழையா தியற்றுவிக்க வென்றுமொழிந் தனையவ்வாறு
யான் பிழையா தியற்றுவிக்க யார்கருத்து முடிந்ததுவோ

(18 வதுபாடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 நாவலரைப் புகழ்ந்து பாடியவர்கள்

3.1.வட்டுக்கோட்டை-சித்தன்கேணி-(1855-1982)

அம்பவாண நாவலர் - சற்குருமணிமாலை(1896) (152 பாடல்கள்)

விரிந்த திருமுறை யீராறுஞ்
சைவம் விளை நிலமே
பரிந்தபன் னான்குசித் தாந்தமு
மங்கட் பயில் நிலமே
தெரிந்த தமிழ்புலிச் செங்கோ
லரசு செலுத்திட வங்
குரித்தரு ளாறு முக நா
வலசற் குருமணியே

3.2 சேற்றூர்க் கவிராயர் .ரா. அருணாசலக்கவிராயர்

1.ஆறுமுக நாவலர் புராணம்

2.நாவலர் திவ்ய நாமச்சிறப்பு-1849 (361 பாடல்கள்)

நிலவுலகி லொரு மதிய நிலவியதென் றேநிகழ்த்தப்
பலகலையு நிரம்பியாழ்ப் பாணமெனும் பாற்கடலி
லிலகியெழீகி நாவலரென் றியம்புபெய ரெவர்பெறினும்
குலவு தமை யே குறிக்கக் கொண்ட பெருங்குலப் புகழார்

3.3. புலோலி .கந்தமுருகேசனார் (1902 - 1965)

நல்லை நாவலன் கோவை 492 பாக்கள்

(01.01.1930 இல் பாடியது)

கந்த முருகேச னாடொறுங் கைதொழ கான் மரை
னந்த வுயர்வது பட்டமடைந்திடு நாவலன் வெற்
பிந்து முகத்தி யணி முத்து மாலையெறி நிலவே
மிந்து மணிமண்டபம் புனல் கால வியற்றிடுமே (பாடல் 33)

நற்றமி முந்தமிழ் நாடதும் புத்துயிர் நண்ணியெழ
வற்றமி லாதுழை யாறு முகனல்லை யன்னவிவர்
பொற்ற ளிர்க்கையுந் திருவடி யுந்தொடு பொங்குமகிழ்
வற்றிட முற்றவம் பற்பல செய்தன னோவுழத்தே (பாடல் 12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4. ஏழாலை .மு.கந்தையா (1917 - 2002)
நாவலர் பிள்ளைத்தமிழ் (100 பாடல்கள்)
3வது பருவம் மான மணிவிளக்கு

பொன்னான நல்லைவளர்
புண்ணியமே தாலேலோ
பொன்வாய் வெண் முத்தமொளிர்
புதுநிலவே தாலேலோ
மன்னான மன்னவனே
மகிபதியே தாலேலோ
மாண் பிறவா மான
மணிவிளக்கே தாலேலோ
சன்மான வெகுமானந்
தரமரியாய் தாலேலோ
தானான தனை யுணருந்
தத்துவனே தாலேலோ
தன்மானத் தமிழ்மகனே
தாலே தாலேலோ
தருமமுணர் திருமகனே
தாலேலோ தாலேலோ

3.5 மீனாட்சி சுந்தரம்பிள்ளை- 3 பாடல்கள் (1815-1876)

மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமும் வரம்பு கண்டோன்
பன்னு சிவ புராணங்கள் பலதெரிந்தோன் சிவாகம பரவைமூழ்கி
உன்னு மனு பூதியெனும் விலை வரம்பி லாமணிகை யுறக்கொண்டுள்ளான்
இன்னுநய குணத்தினனாய் சைவமெனும் பயிர்வளர்க்கு மெழில் போல்வான்

3.6 சு.கதிர்வேற்பிள்ளை சிறப்புப்பாயிரம் (1871 - 1907

சிவம்பழுத்த திருநல்லூர்க் கயிலாச
விநாயகர்தாள் சிந்தித்தேத்தி
பவம் பழுத்த அமரர்குறை தீர்த்தாண்ட
குமாரவேள் பாதம் போற்றி
அவம் பழுத்த மதங்குன்றச் செந்தமிழும்
சிவநெறியும் அடைவே ஓங்கத்
தவம் பழுத்த ஆறுமுக நாவலனாம்
சரிதமிது சாற்றி வாழ்வாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.7 அ. குமாரசாமிப்புலவர் (1854 - 1922)

1. கல்விக் களஞ்சியம் கற்றவர்க்கேறு கருணைவள்ளல்
சொல்வித்து வப் பிரசாரகன பூதிதுலங்கு மெய்யன்
நல்லைப் பதியினன் ஆறுமுகப்பெரு நாவலனுந்
தில்லைப் பதியினன் நடராஜன் சேவடி சேர்ந்தனனே
2. பூமாது வாழ்வு செய்யும்..... (கலிவெண்பா)
(த.கைலாசபிள்ளை- நாவலர் சரித்திரம் பக்கம் 132)

3.8 சுவாமி விபுலானந்தர் (15 பாடல்கள் ) (1892 - 1947)

ஆரிய ராழி வேந்தரென் றவனி
புகழ்ந்துரை யளிக்க நல் லூரிற்
சீரிய செங்கோல் செலுத்திய வேந்தர்
சென்றபின் சைவநிந் தனைசெய்
பூரிய ராட்சி புக்கது கண்டு
பொறாதுபுண் ணியத்திசை நடந்த
நேரியன் ஞான விளக்கெனு முனிவன்
நிறைபுகழ் மரபுமேம் படவே (பாடல்2)

3.9 உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் (1829-1910)

ஆரூரனில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லை
சீருரு மாணிக்க வாசகனில்லைத் திசையழந்த
பேரூருமாறுமுக நாவலனில்லைப் பின்னிங்குயார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர் மையரே

3.10 வே. கனகரத்தினம் (ஆறுமுகநாவலர் சரித்திரம் நூல்)

தண்ணிய சீர்தரு சைவந்தழைத்தோங்கித் தலையெடுப்ப
வெண்ணியதற் கேற்றநூலனைத்தும் வெளியேற்ற - யெங்கள்

புண்ணியமே யெதிர்வந்தாற் போல் வந்து போதிக்கு
நண்ணிய மெய்யாறுமுகநாவலர் நற்சரிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.11 சி. வை. தாமோதரம்பிள்ளை (1832-1900)

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே- எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை

3.12 ஊரெழு சரவணமுத்துப்பிள்ளை(1868-1916)

தேனோ கனியோ வெனவே
சுவைக்குஞ் செழுந்தமிழில்
தானே தனக்கிணை யாகி
யுதித்துயர்சற் குருவாய்
வானோர் புகழ்நல்லை வந்தரு
ணாவலன் வண்புகழை
நானோ சொலவல்லன் சேடனுங்
கூறிட நாணுவனே

3 .13 நவாலியூர் சோமசுந்தரப்புலவர் (1878-1953)

அன்னநடை பிடியின் அழகுநடை
அல்லஎன அகற்றி அந்நாள்
பன்னமுது புலவரிடம் செய்யுள் நடை
பயின்ற தமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
எனப் பயிற்றுவித்த ஆசான்
மன்னும் அருள் நாவலன்றன் அழியாநல்
ஒழுக்கநடை வாழி! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை
(மலரும் மாலையும் நூலில் மூன்று பாடல்கள்)

புண்ணிய நாள் நாளெல்லாம் போற்றுநாள் செந்தமிழ்த்தாய்
எண்ணியெதிர் பார்க்கும் இனிய நாள்- மண்ணுலகில்
மேவுமுயர் சைவம்விளங்கிடு நாள் ஆறுமுக
நாவலர்கோன் தோன்றிய நன்னாள்

3.15 காசிவாசி சி.செந்திநாதையர் (1848 - 1924)

தேவாரம் யான் சொலக்கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவ பூசைப்பொலி வழகும்
பாவாணர் மெச்சச் செய்யு பிர சங்கமும் பார்த்தினியான்
நாவார வாழ்த்திடு நாளுமுண்டோ நல்லை நாவலனே

3.16 சுன்னாகம்.சிவசங்கரபண்டிதர் (1829 - 1870)
(பெரியபுராண சிறப்புபாயிரம் -33 வரிகள்)

பூரண சிவானு பூதிமானாகிய
திருநெல்வேலிச் சீருருடையனாம்
பெருமை சேர் ஞானப்பிரகாச முனிவரன்
வந்தவதரித்த சுந்தர மார்பினன்.....
..............................................
மறைத்திகழ் பிரணவமன்ன
முறைதிக ழாறுமுக நாவலனே

3.17 பண்டிதர் கா.பொ.இரத்தினம்

பூமணக்கும் பொழில் மணக்கும்
புனித நல்லூர்தான் மணக்கும்
பாமணக்க உரை மணக்க பகர்
சைவநெறி மணக்க
தேமணக்குந் தமிழணங்கு
செய்தபெருந் தவப்பயனால்
நாமணக்க அவதரித்த
நாவலன்தாழ் இறைஞ்சுதுமே
(நாவலர் 150வது ஜெயந்தி விழா மலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.18 கொக்குவில் சபாரத்தின முதலியார் (1858-1922)

சிவசமய கமலமதைத் தமிழ்நாடாந்
திருமடுவிற் செறித்த வர்த்திப்
பவமயரற் தாங்கணுற்ற பரசமய
விருள் கடமைப் பதற வேண்டித்
தவநெறியாற் தேரினிடைத் தனியூர்ந்து
தற்பரனா மாழி சார்ந்தா
னவமகல வுலகுபெற மாறுமுக
நாவலனா மானில யோனே

சுன்னாகம்

3.19 புலோலி முருகேசு பண்டிதர் (1902—1965)

எவ்விடமும் நின்புகழே எவ்விடமும் நின்பேரே
எவ்விடமும் நின்சொல்லே எய்திபோல் - எவ்விடமும்
எக்கால முமில்லை இன்னினியார் நின்புகழ்க்குத்
தக்கார்சொல் நாவலன் நீதான்

3.20 வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை (1837 - 1897)

சங்கேந்து மாற்கரிய சங்கரனைத் தன்னிதய
பங்கே ருகம்வைத்த பண்பானை- யெங்கோனை
ஆறுமுக நாவலனை யர்ச்சித் தடிபணியிற்
பாறும் பவநோய் பறிந்து

3.21 தாண்டவராய சுவாமிகள்-திருக்கோவையர் பதிப்பு நேரிசை வெண்பா-250 அடி

3.22 மீனாட்சி சுந்தரபிள்ளை -திருக்கோவையர் பதிப்பு நேரிசை வெண்பா-144 அடி
பொன்னுச்சாமி தேவர் -திருக்கோவையர் பதிப்பு நேரிசை வெண்பா-24அடி
சுப்புராயர் செட்டியார் -திருக்கோவையர் பதிப்பு நேரிசை வெண்பா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.23 கார்த்திகைமா தத்துமகம் காசினிக்கு சைவநிலை
சேர்த்திப் பரசமயம் சேதித்துச்- சீர்த்திமிக
மேவு தமிழ் தந்தகந்த வேள்நல்லூர் ஆறுமுக
நாவலர் வீடுற்றதிரு நாள் (புலவர் ஒருவர்)


3.24 திருப்புத்தூர் புராணத்தில் நாவலரை வணக்கம் செலுத்தும் காரைக்குடி சொக்கலிங்கம் (இவர் நாவலர்குரு வாகப் பதிகமும் பாடியுள்ளார்)

"ஆற்றுபணி கொண்டடியென் முடியிற சூட்டும்
மாறுமுக நாவலர் கோ னவன்தாட் கன்பே
போற்றுவழி வந்த விமற் சரமெய்ச் சீலர்
புத்திமகிழ் வுறவர் என்சொற் புன்மை நோக்கி...."

3.25 நாவலர் பிள்ளைத்தமிழ் (100 பாடல்கள்
காரைநகர் க.வைத்தீஸ்வரக் குருக்கள்

3.26 நாவலர் வெண்பா (43 பாடல்கள்)
தில்லைச் சிவன்- செந்தமிழ்ச் செல்வி

## நாவலரின் பரம்பரை ஆண்வழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. ஆறுமுக நாவலரின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

1.வாழ்ந்த காலம் :- கி.பி 1822- கி.பி 1879

2.ஊர் :- யாழ்ப்பாண மாவட்டம்.நல்லூர்

3.பெற்றோர் :- கந்தப்பிள்ளை
சிவகாமியம்மை

4. பேரன் :- பரமானந்தர்

5.பிறப்பு :- 18.12.1822 புதன் இரவு 10 நாழிகை
சித்திரபானு மார்கழி 5.அவிட்டநட்சத்திரம்

6.சகோதரங்கள் :- மூத்தசகோதரன்மார் 5பேர்
மூத்தசகோதரிமார் 3 பேர்

7.ஆரம்பக்கல்வி :- 1827 ம் ஆண்டு
1.வி.சிவசுப்பிரமணியம்
2.வேலாயுத முதலியார்
3.சேனாதிராய முதலியார்
4.ந. சரவணமுத்து புலவர்

8.ஆங்கில புலமை பெறுதல் :- பீற்றர் பார்சிவல் பாதிரியாரின் யாழ்
வெஸ்லியின் ஆங்கிலப் பாடசாலை
1834 ஆகஸ்ட்
ஜயவருடம்

9.ஆசிரிய நியமனம் :- 1841.யாழ் வெஸ்லியின் கல்லூரி

10.தந்தையார் மரணம் :- 1842

11.இலவச திண்ணைப்பள்ளி :-1845 விசுவாசுவ வருடம்
காலை-மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.முதற் பிரசங்கம் :- 1847.12.31 பிலவங்க வருடம் மார்கழி
தலைப்பு : சைவசமயகுரவர்களும் சைவசிந்தாந்தமும்
இடம் : வண்ணை சிவன் கோவில் மண்டபம்

13.ஆசிரியப் பணி துறப்பு :-1848 ஆகஸ்ட்

14.தென்னிந்தியப பயணம் :- 1848.யூலை ,சௌமிய வருடம் ஆடி
வேதாரணியம் -திருவாவடுதுறை ஆதீனம்.நாவலர் பட்டம் வழங்குதல்
அச்சியந்திரக் கொள்வனவு -சென்னை - யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அச்சுயந்திரம் ஸ்தாபனம் - 1849

15.வண்ணை நாவலர் சைவப்பிரகைாச வித்தியாசாலை ஸ்தாபிதம்
1848 ஆவணி 5 ,வெள்ளி
பிரமச்சரியம் ஏற்றல் சிவபூசை செய்தல் - 1854 அக்ரோபர்

16.அராலி வண்ணபுரம் சிவன் கோவில் விக்னேஸ்வரர் பிரதிஷ்டை
1856 ஏப்ரல் நள வருடம் .சித்திரை05

17.தாயார் மரணம் :- 1857 டிசம்பர் /பிலவங்க மார்கழி சுக்கில ஏகாதசி

18.தென்னிந்தியப் பயணம் :- யூன் 1858 /காலயுக்தி ஆனி
யாழ்ப்பாணம்-திருவாவடுதறை-சீர்காழி-சிதம்பரம்-சென்னை-திருமயிலாப்பூர்-திருவண்ணாமலை

19.யாழ்ப்பாணம் திரும்புதல் - மார்ச் 1861/துன்மதி பங்குனி

20.தென்னிந்தியப் பயணம் :- டிசம்பர் 1863 (ருதிரோக்காரி மார்களி)
இராமேஸ்வரம் -திருவாவடுதறை-மதுரை மீனாட்சி-குன்றக்குடி-திருவண்ணாமலை-திருப்பெருந்துறை-கும்பகோணம்-சென்னை

21.சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவுதல்:- 1864 ஐப்பசி 28
(தற்பொழுது 1949 முதல் ஆறுமுகநாவலர் உயர் பள்ளி)

22.இராமலிங்க வள்ளலார் பாடல்களை எதிர்த்தல்
1867 யூலை /பிரபவ வருடம் ஆடி 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.கோப்பாய் சைவாசிரியர் பாடசாலை நிறுவுதல் :- 1868

24.யாழ்ப்பாணத்தில் நாவலருக்கு சிறப்பான வரவேற்பு
1869 சுக்கில வருடம் ஆனி

25.யாழ் ஆங்கில பாடசாலை நிறுவுதல்
1872

26.கோப்பாய் ,புலோலியில் சைவப்பிரகாசப் பாடசாலை நிறுவுதல்
1873

27.பஞ்சம் ஏற்படுதல்-கஞ்சி வார்த்தல்,பிடியரிசித்திட்டம்
1876-1877

28.கீரிமலை சிவன் கோவில் பத்திரிகை வெளியீடு - விஞ்ஞாபனம்
1878/வெகுதான்ய வைகாசி 24

29.நாவலரின் இறுதிப் பிரசங்கம் -யாழ் சைவப்பிரகாச வித்தியாசாலை-
பிரமாதி ஆடி மாத சுவாதி 1879

30. நாவலர் மறைவு-1879.10.05 - வண்ணார்பண்ணை
பிரமாதி கார்த்திகை 21 வெள்ளி

31.சிதம்பரத்தில் பஞ்ச லோகத்தில் சிலை திறப்பு :-1967

32.நல்லூரில் நாவலர் திருவுருவச் சிலை நிறுவுதல் :-1969 யூன் 29

33.நாவலர் கலாசார மணிமண்டபம் -1971.12.18

34.நாவலர் தபால் முத்திரை -1971.10.29 அரசு வெளியீடு 5சதம்



35.நாவலரது 200 வது ஆண்டு நிகழ்வுகள் -2021-2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் மரபினில் வாழ்ந்த பெரியார்கள்

| | | |
|---|---|---|
| 1. க.சதாசிவப்பிள்ளை | (1826-1910) | நல்லூர் |
| 2.த.கைலாசபிள்ளை | (1855-1939) | நல்லூர |
| 3.ச.பொன்னம்பலம்பிள்ளை | (1837-1897) | கோப்பாய் |
| 4.மா.வைத்தியலிங்கம்பிள்ளை | ( -1902) | வண்ணை |
| 5.அ.குமாரசுவாமிப்புலவர் | (1854-1922) | சுன்னாகம் |
| 6.ம.ஏரம்பையர் | (1847-1914) | மாதகல் |
| 7.ம.க.வேற்பிள்ளை | (1846-1930) | மட்டுவில் |
| 8.வ.குமாரசுவாமிபுலவர் | ( -1926) | புலோலி |
| 9.ச.சிவப்பிரகாசபண்டிதர் | (1864-1916) | நீர்வேலி |
| 10.சி.வை.தாமோதரம்பிள்ளை | (1832-1901) | சிறுப்பிட்டி |
| 11.சி.சுவாமிநாதபண்டிதர் | ( -1937) | வண்ணை |
| 12. .நடராசையர் | ( -1903) | இணுவில் |
| 13.வி.கந்தப்பிள்ளை | (1840-1914) | வேலணை |
| 14.சி.செந்திநாதையர் | (1840-1924) | குப்பிளான் |
| 15.ச.சபாரத்தினமுதலியார் | (1858-1922) | கொக்குவில் |
| 16.வை.திருஞானசம்பந்தம்பிள்ளை | (1849-1901) | நல்லூர் |
| 17.வி.சுப்ரமணியபிள்ளை | ( -1873) | நல்லூர் |
| 18. .கந்தமுருகேசனார் | (1902-1965) | புலோலி |
| 19.சு.சபாபதிநாவலர் | (1845-1903) | கோப்பாய் |
| 20.வே.கனகரத்தினம் | | வண்ணை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21.மு.தில்லைநாதபிள்ளை | (     -1867) | வண்ணை |
| 22.சு.நமச்சிவாயபுலவர் | | ஆவரங்கால் |
| 23.நா.கதிரவேல்பிள்ளை | (1871-1907) | புலோலி |
| 24.மு.சபாபதிச்செட்டியார் | (1856-1906) | |
| 25.ச.அருணாசலஉபாத்தியாயர் | (1864-1920) | காரைதீவு |
| 26.ஆ.அம்பலவாணநாவரல் | (1855-1932) | சித்தண்கேணி |
| 27.சு.சிவபாதசுந்தரம்பிள்ளை | (1878-1953) | புலோலி |
| 28.ச.குமாரசுவாமிக்குருக்கள் | (1886-1971) | அச்சுவேலி |
| 29.த.குமாரசுவாமிப்புலவர் | (1895-1968) | கொக்குவில் |
| 30.க.சோமசுந்தரப்புலவர் | (1878-1953) | நவாலி |
| 31.மு.கந்தையா | (1917-2002) | ஏழாலை |
| 32.சி.கணபதிப்பிள்ளை | (1889-1986) | மட்டுவில் |
| 33. திருஞானசம்பந்தர் | (1839-1906) | சுழிபுரம் |
| 34. அம்பிகைபாகன் | | இணுவில் |



த.கைலாசபிள்ளை



சி.செந்திநாதையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் மரபுகாத்த பெரியோர்கள்


சிவபாதசுந்தரம்



அம்பலவாணநாவலர்


வைத்தீஸ்வரக்குருக்கள்


குமாரசாமிக்குருக்கள்


சோமசுந்தரப்புலவர்



நாவலர் வெண்கலச் சிலை
(சிதம்பரம்)


சுவாமி விபுலாநந்தர்


பொன்னம்பலபிள்ளை


சி.வை.தாமோதரம்பிள்ளை


சி. கணபதிப்பிள்ளை


கந்தமுருகேசனார்


அ. குமாரசாமிப்புலவர்


மு. கந்தையா

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை. 0776915339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org